**தலைப்பு 106 – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 106 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 5,388.41 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 4,139.09 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 1,249.32 மில்லியன் அதாவது 23.18 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 740.72 | 660.64 | 80.08 | 10.81 |
| மூலதனம் | 4,647.69 | 3,478.45 | 1,169.24 | 25.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்தம் | **5,388.41** | **4,139.09** | **1,249.32** | **23.18** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

அமைச்சிற்குரிய 10601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** |
| 15.00 | 14.11 | 3.50 | 6.33 | 24.00 | 20.07 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0385/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 26,183 ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 02 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4.53 மில்லியனாகும். விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0013/0056/000 | 2.88 |
| 6000/0000/00/0016/0037/000 | 1.65 |
| **மொத்தம்** | **4.53** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்பட்ட ஒரு பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் மேலும் இரண்டு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (iii) | வாகன சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் | நிதிப்பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

10601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியிலுள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 120,023 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கை 2017 யூன் 23 ஆம் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டிற்குரிய தேசிய அனர்த்த உதவிச் சேவைகள் நிலையத்தின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் பிரகாரம் 04 பொருள் வகைக்குரிய 06 விடயங்கள் பற்றாக்குறையாகவும் ஒருகொடவத்தை களஞ்சியத்தின் 52 பொருள் வகைக்குரிய 42,215 விடயங்கள் பற்றாக்குறையாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஒருகொடவத்தை களஞ்சியத்தால் வழங்கப்பட்டிருந்த பொருளிருப்பு தொடர்பான குறிப்புக்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னாள் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரிற்கு வழங்கப்பட்ட பொருளிருப்பு பொருட்களோ அல்லது அவற்றிற்குரியதாக பெறப்படும் கட்டளைகளோ பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயன்பாட்டிற்காக 32 மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன.

**(இ) வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 3,848,889 பெறுமதியான 3 றுட்கள் 36.5 பேர்ச்கள் காணி மற்றும் 4 மாடிக் கட்டிடம் என்பன 2012 ஆம் ஆண்டிலிருந்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| (i) நிதிப்பிரமாணம் 261(1) | | உறுதிச்சீட்டுக்கள் தொடரிலக்கம் இடப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 268,604 | வழங்கப்பட்ட உப கட்டுநிதிகளிற்குரிய நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. |
| **(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை** | | |
| 2.7, 2.8, 5.4.4, 5.6 மற்றும் 6.3.3 ஆம் வழிகாட்டிகள் | 59,613,750 | மீளாய்வாண்டின் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 02 மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் அதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்**

**அனர்த்தத்தின் பின்னரான நிவாரண நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஒக்தோபர் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் ஒருகொடவத்தை களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது காலாவதியான மற்றும் காலாவதித் திகதியை அண்மித்த உணவுப்பொருட்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட மக்களிற்கிடையில் பகிர்ந்தளிப்பதற்காக பெறப்பட்ட 4½ தொன் அரிசி, 89 தண்ணீர் போத்தல்கள், 27 கிலோகிராம் பால்மா மற்றும் அதிக எண்ணிக்கையான பிஸ்கட் பக்கற்றுக்கள் என்பவற்றை காலாவதியான இருப்புக்கள் வெளிப்படுத்தியிருந்தன. அதற்கிணங்க, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களிற்கிடையே வெவ்வேறு உள்ளுர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பொருட்களை பகிர்ந்தளிப்பதற்காக முறையான பொறிமுறையை அமைச்சு அமுல்ப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 மே 17 ஆம் திகதி கேகாலை மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 2017 ஆகஸ்ட் 31 வரையிலும் 18 நிவாரண நிலையங்களில் 282 குடும்பங்கள் தங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. கேகாலை மாவட்டச் செயலாளரின் முன்மொழிவின் பிரகாரம், பயனாளிகள் அவர்களாகவே வீடுகளை நிர்மாணிப்பதற்கும் அவற்றிற்கான தவணைக்கட்டணங்களாக இழப்பீட்டுப் பணத்தினை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனால் இடம்பெயர்ந்த நபர்கள் உரிய வீடுகளின் நிர்மாணம் பூர்த்தியடையும் வரை நிவாரண நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என அமைச்சின் செயலாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 20 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 02 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 444 | 393 | 51 |
| (iv) | ஆரம்ப நிலை | 46 | 34 | 12 |
| | **மொத்தம்** | **519** | **449** | **70** |